12 ஜூன் 2022

Newbec

NEW WAY OF BEING CHURCH

மூவொரு இறைவன் பெருவிழா

**மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:** ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத்தூது




# தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக!

“ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அருளும், கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக” (2 கொரி: 13:13) மூவொரு கடவுளின் மறைஉண்மை தான் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வின் நம்பிக்கையும் வாழ்வும் ஆகும்.

நம்பிக்கையின் மறை உண்மைகளின் ஆதாரம், நமக்கு அறிவூட்டும் ஒளியாகத் திகழ்கிறது. (கதிம எண்:234)

தந்தை, மகன் தூய ஆவியாரின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் தமதிரித்துவத்தையும் அவர்கள் செய்வது அனைத்தையும் பிரிக்கமுடியாதது என்பது நம் திருஅவையின் நம்பிக்கை. இது நம்முடைய திருவழிபாட்டில் பிரதிபலிக்கிறது. திருமுழுக்கின்போதும், நம்பிக்கை அறிக்கையை அறிக்கையிடும்போதும், திருமண அருளடையாளக் கொண்டாட்டத்தின்போதும் பிரதிபலிக்கிறது. நாம் செய்யும் அனைத்து இறைவேண்டலின்போது மூவொரு இறைவனை நாம் அழைக்கின்றோம். **ஒவ்வொரு முறையும் நாம் சிலுவை அடையாளம் வரையும்போது, கடவுள் மூவொரு இறைவனாக இருக்கிறார் என்பதை நாம் வெளிப்படையாக அறிக்கையிடுகின்றோம்.**

தொலைந்துபோயிருந்த, குழப்பத்திலிருந்த, சிலுவையில் இழந்து மீண்டும் கிடைத்த இயேசுவை எங்கே மீண்டும் இழந்துவிடுவோமோ என்ற பயத்திலிருந்த சீடர்களுக்கு இன்று இயேசு பிரியாவிடை தருவதைப் பார்க்கிறோம். ஆனால் இதோ, இறைமகன், அவர்களை தனியே விட்டு விடமாட்டேனென்று உறுதியளிக்கிறார். முழு உண்மையை நோக்கி அவர்களை வழிநடத்த அவரின் பெயரால் ஒரு துணையாளரை அனுப்புவார். என்னிடமிருந்து பெற்று உங்களுக்கு அறிவிப்பார். தந்தையுடையதெல்லாம் என்னுடையதே. இன்னும் சொல்லப்போனால், நண்பர்களே, இன்னும் நான் உங்களோடு உங்கள் மத்தியில் தான் இருக்கிறேன் என்று சொல்கிறார். இன்னும் பலவற்றைப் பற்றி நான் கூறவேண்டும். ஆனால் அத்தனையும் உங்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்றும் கூறுகிறார். அவர்களின் மனநிலையைப் புரிந்துகொண்ட அவர், தக்க நேரம் வரும்போது, தூய ஆவியார் உங்களுக்கு அனைத்தையும் தெளிவுபடுத்துவார் என்றும் கூறுகிறார்.

உண்மையில் இது சீடர்களுக்கு மிகவும் நல்ல செய்திதான். சீடர்களுக்கு மட்டுமல்ல; நமக்கும் நல்ல செய்திதான். நாம் திக்கற்றவர்களாகி விடமாட்டோம் என்பது நமக்குத் தெரியும். எந்தச் சூழ்நிலையிலும் நாம் விரக்தியடையத் தேவையில்லை. நம்பிக்கையில் கடவுள் நம்மைத் தொடர்ந்து வழிநடத்தி, தூய ஆவியின் மூலம் உண்மைக்கு நம்மை அழைத்துச் செல்வார். தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் நாம் மாட்சி செலுத்துவோம். தொடக்கத்தில் இருந்ததுபோல இப்போதும் எப்போதும் என்றென்றும் இருப்பதாக! ✣

**மனனம் செய்ய இந்த வார வசனம்:**

எனவே, நீங்கள்போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்.

(மத்: 28:19)

**இன்றைய வாசகங்கள்:**

நீதிமொழிகள்: 8: 22-31;

திபா: 8: 4-9;

உரோ: 5:1-5;

யோவான்: 16: 12-15.

INTERNAL CIRCULATION ONLY
BUL 24/2022

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org